**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No.91/2019**

**PW–11**

**Date :–14.07.2026**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.லதா | Caste | |
| க/பெ. | திரு.சிவக்குமார் | Calling | மாவட்ட குற்ற ஆவண காப்பகம் காவல் ஆய்வாளர் |
| Village | திருச்சி சரகம் | Religion | |
| Taluk | திருச்சி. | Age | 51/2026 |

**அரசு தரப்பு முதல் விசாரணை-**

**நான் தற்சமயம் திருச்சி மாவட்டத்தில் மாவட்ட குற்ற ஆவண காப்பகம் காவல் ஆய்வாளராக பணிபுரிந்துஅயல் பணியாக தற்போது** DIG **அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த** 01.02.2015 **ம் தேதி ஜீயபுரம் வட்ட ஆய்வாளராக பணியாற்றியபோது திருச்சி பெட்டவாய்த்தலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக திரு . பாலசுப்பிரமணியன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது துறையூர் பொன்னம்பலம்பட்டியை சார்ந்த முத்துவீரன் மகன் ஆறுமுகம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்**. 56/2015 **சட்டப்பிரிவுகள்** 279, 337, 304(A) **இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் . அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா-ஆ-**3 **ஆக குறியீடுசெய்யப்படுகிறது**. **பின்னர் வழகது கோப்புகளை உதவி ஆய்வாளர் மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார் . பின்னர் வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு நான் அன்றைய தினம்** 07.30 **மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சக்திவேல் , முருகேசன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் . மாதிரி வரைபடம் அ .சா.ஆ.**4 **ஆகவும் குறியிடுசெய்யப்படுகிறது.பின்னர் எதிரியை தேடிவந்த நிலையில்** 02.02.2015 **ம்தேதி மதியம்** 09.00 **மணிஅளவில் நிலையம் ஆஜரான எதிரியை காரணம் கூறி கைது திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்புவித்து உரிய சட்டநடைமுறைகளை பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் . பின்னர் விபத்தில் இறந்த பிரகாஷ்** (எ) **ஜெயபிரகாஷ் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள்**

முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை திருச்சி அரசு மருத்துவமனையில் வைத்து தயார் செய்தேன் .**அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ-5 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் ஆறுமுகம், செந்தில்குமார், பிருந்தா, செல்வி, ரத்தினவேல், தங்கராஜ், முத்து, பிரபு,திவ்யா, ராதா, ராஜலிங்கம், சக்திவேல், முருகேசன், ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இறந்த பிரகாஷ் (எ) ஜெயபிரகாஷ் மீதுபிரேத பரிசோதனை செய்ய வேண்டி காவலர் ரஞ்சித்குமார் என்பவர் மூலம் திருச்சி அரசு மருத்தவமனை மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். பின்னர் பிரேத பரிசோதனை செய்த திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. சவரணன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மருத்துவரிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** பின்னர் விபத்தில் காயம்பட்ட தங்கராசு, முத்து ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்த திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி .கல்பனா திலகம் அவர்களை விசாரணை செய்து மருத்துவரிடமிருந்து மேற்படி இரண்டு நபர்களுக்கான விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றுள்ளார் . தங்கராசு, என்பவரின் **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ .சா.ஆ-7 ஆகவும், முத்து என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ-8 ஆகவும் குறியிடுசெய்யப்படுகிறது .** பின்னர் விபத்தில் காயம்பட்ட செந்தில்குமார், பிருந்தா ஆகியோருக்கு சிகிச்சையளித்த திருச்சி அட்லஸ் மருத்துவமனை மருத்துவர் திரு . சுப்பிரமணியன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி இரண்டு நபர்களுக்கான விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றுள்ளார். செந்தில்குமார் என்பவரின் **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ .சா.ஆ 9 ஆகவும், பிருந்தா என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ .சா.ஆ-10 ஆகவும் குறியிடுசெய்யப்படுகிறது.** பின்னர் விபத்தில் காயம்பட்ட ரெத்தினவேல் என்பவருக்கு சிகிச்சையளித்த திருச்சி இரத்னா குளோபல் மருத்துவமனை மருத்துவர் திரு . பிரவீன்தாஸ் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றுள்ளேன் . **ரெத்தினவேல் என்பவரின் விபத்து**

**பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ .சா.ஆ 11 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** பின்னர் விபத்தில் காயம்பட் செல்வி என்பவருக்கு சிகிச்சையளித்த திருச்சி ராயல் பேர்ல் மருத்துவமனை மருத்துவர் திரு. சதீஷ்குமார் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றுள்ளேன் . **செல்வி என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ 12 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** பின்னர் விபத்தின் காரணம் அறியும் பொருட்டு விபத்து ஏற்படுத்திய TN-38 N-2729 என்ற பேருந்தையும், விபத்திற்குள்ளான வாகனமான TN-45 N-2064 பேருந்தையும் விபத்தின் காரணம் அறியும் பொருட்டு ஸ்ரீரங்கம் மோட்டாா வாகன ஆய்வாளருக்கு ஆய்வு அனுப்பிவைத்தேன் . பின்னர் மோட்டாா வாகன ஆய்வாளர் திருமதி . சித்ரா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்களிடமிருந்து மேற்படி பேருந்தின்ஆய்வறிக்கை பெற்றேன். **அந்த TN-38 N-2729 என்ற பேருந்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.13 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. அந்த** TN-45 N-2064 **என்ற பேருந்தின் ஆய்வறிக்கை அ .சா.ஆ.14 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** பின்னர் காவலர் ரஞ்சித்குமார் காவல் உதவி ஆய்வாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் .பின்னர் வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337,304(A)இதசவிலிருந்து 279, 338, 337, 304(A) ,இதசவாக மாற்றம் செய்து அதற்கான சட்டப்பிரிவு மாற்று அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.15 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 338, 337, 304(A) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-

புகாரில் தேதி பதிவு செய்து வாங்கவில்லை என்றால் புகாரில் குறிப்பிடவில்லை. நகர பேருந்தின் ஓட்டுநரை மருத்துவபரிசோதனை செய்யவில்லை என்றால் சரிதான் நகர பேருந்தின் ஓட்டுநரின் உடல் ஆரோக்கியத்தை பற்றி நான்தெரிந்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நகர பேருந்தின் அகலம் எத்தனை மீட்டர் என்று விசாரணையில்

குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . நகர பேருக்கு கிழமேல் ரோட்டில் வடபுறத்தில் எத்தனை அடியில் நின்றது என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல் ல குறிப்பிட்டுள்ளேன் . நகர பேருந்தின் டயர் தடத்தை குறியீடுசெய்யவில்லை என்றால் சரிதான் . நகர பேருந்தின் விபத்திற்கு முன்போ,அல்லது பின்போ ஒலி எழுப்பட்டதா என்று எனது விசாரணையில குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . நகர பேருந்து நடுரோட்டில் நின்றத்தை ஆய்வில் கண்டுபிடிக்கவில்லை என்றால் நடுரோட்டில் நிற்கவில்லை . நகர பேருந்து சிக்னல் செய்து நிறுத்தவில்லை என்பதை எனது ஆய்வில் கண்டுபிடிக்கவில்லை என்றால் அது பேருந்து நிறுத்தம் . எனது வரைபடத்தில் பேருந்து நிறுத்ததை காட்டவில்லை என்றால் சரிதான். எதிரி ஓட்டிவந்த பேருந்து இடதுபுறம் பாதிப்பு அதிகம் இல்லை என்றால் சரியல்ல . அந்த பாதிப்பை கணக்கீட்டுஇருந்தால் எதிரி மீது தவறு இல்லை என்று தெரியவரும் என்றால் சரியல்ல . விபத்தில் காயம்பட்டவர்களுக்கு நஷ்டஈடு பெறுவதற்காக எதிரி மீது குற்றம்சாட்டியுள்ளேன் என்றால் சரியல்ல . எதிரியை மருத்துவ ஆய்வுக்கு உட்படுத்தவில்லை என்றால் சரிதான் . அவருடைய உடல் ஆரோக்கியத்தை பற்றி எனது விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . அ.சா.9 பார்வை மகஜர் சாட்சி தன்னுடைய கையொப்பம் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.9 ன் தந்தை பெயா தவறாக இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . சம்பவத்தின்போது மேற்கிலிருு்து கிழக்குநோக்கி வந்தவாகனத்தை ஆய்வுசெய்யவில்லை என்றால் சரிதான் . சம்பவத்தின்போது மேற்கிலிருந்து கிழக்குநோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்த வாகனத்தை விசாரணையில் விசரிக்கவில்லை என்றால் வழக்கில் எதிரி

அஜாக்கிரதையால் ஏற்பட்டது . மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்த வாகனத்தை பற்றி பொதுமக்களிடம் விசாரிக்கவில்லை என்றால் சரிதான் . மேற்கிலிருந்து கிழக்கி நோக்கி அதிவேகமாகவும் , அஜாக்கிரதையாகவும் சரக்கு லாரி வந்தது பற்றி நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான் . சாட்சிகள் அனைவரும் சம்பவ இட சாட்சிகள் இல்லை . கையிருப்பு சாட்சியும், பாதிக்கப்பட்ட வர்களின் உறவினர்கள் என்றால் சரியல்ல . பாதிக்கப்பட்டவர்களுக்காக சாட்சியம் அளித்துள்ளவர்கள் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் இல்லை என்றால் சரியல்ல . நகர பேருந்தின் அலட்சியம்தான் இந்த விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல . நகர பேருந்தின் ஓட்டுநர் முறையாக அறிவிப்பு செய்து நிறுத்தியிருந்தால் இந்த விபத்து ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல . நகர பேருந்திற்க பின்னால் ஏற்பட்ட சேதரத்தை வைத்து எதிரியை குற்றவாளியாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல . முறையாக ஆய்வு செய்திருந்தால் எதிரி குற்றவாளி இல்லை என்று தெரியவரும் என்றால் சரியல்ல. பொதுவாக முன்னோக்கி செல்லும் பேருந்தை நோக்கிதான் பயணிகளின் பார்வை இருக்கும் என்றால் சரிதான் . பின்னால் நடக்கும் சம்பவம் முன்னோக்கி பயணிக்கும் பயணிகளக்கு சத்தம் கேட்டால்தான் தெரியும் என்றால் பின்னாடியும் பார்ப்பார்கள் . எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தசம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல . நான் டயர் தடயத்தை கண்டுபிடிக்கததால் எந்த வாகனத்தின்மீதும், எந்த ஓட்டுநர் மீது தவறு என்று இறுதி செய்யமுடியாது என்றால் சரியல்ல . என்னுடைய வரைபடத்திற்கும் விபத்திற்கும் எந்தசம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய வரைபடம் கையிருப்பு சாட்சிகள் கொண்டு தயார் செய்யப்பட்ட வரைபடம் என்றால் சரியல்ல . வரைபட சாட்சிகளின்

**கையெழுத்தும் தகப்பனார் பெயரும் தவறாக இருப்பதால் வரைபட சாட்சி உண்மையான சாட்சி இ்ல்லை என்றால் சரியல்ல . நான் முறையாக விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து இறுதிஅறிக்கையை எதிரிக்கு எதிராக உண்மைக்கு மாறாக குற்றச்சாட்டை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல**.

Sd/-xxxxx

Taken down by me in open court , read over to her and accepted by her as correct and made her signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.